Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம 10

# ஈழநாடு

EELA NADU

பேரன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ வைகாசி 6 ஆம் நாள் துல்ஹஜ் 3 (19-5-61) வெள்ளிக்கிழமை இதழ் 81

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 / 303 / 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

பெங்களூர்–2.

# பார்லிமெண்டிலிருந்து பிலிப், ராபர்ட் வெளியேற்றப்பட்டனர்

## 15 நிமிஷம் சபை ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, வெள்ளி

நேற்று நடைபெற்ற ஜனப்பிரதிநிதிகள் சபைக் கூட்டத்திலிருந்து அவிசாவளை எம். பி. திரு. பிலிப் குணவர்த்தனவும், அவரது சகோதரரான கோட்டே எம். பி. திரு. ராபர்ட் குணவர்த்தனவும் வெளியேற்றப்பட்டனர்.

திரு. பிலிப் குணவர்த்தன சபைநடவடிக்கைகளில் ஒரு வாரம் பங்குபற்றக்கூடாதென்றும், திரு. ராபர்ட் குணவர்த்தன 2 வாரம் சபைக்கு வரக்கூடாதென்றும் சபாநாயகர் திரு. ஆர். எஸ். பெல்பொல உத்தரவிட்டார்.

திரு. பிலிப் குணவர்த்தன சபாநாயகரின் உத்தரவை ஏற்றுச் சபையை விட்டு வெளியேறினார். அவர் வெளியில் செல்லும்போது, சபையின் கௌரவத்தைப்பாதுகாக்குமாறு சபாநாயகரை நோக்கிக் கூறிவிட்டுச் சென்றார்.

ஆனால் திரு ராபர்ட்குணவர்த்தன சபாநாயகரின் உத்தரவுக்குப் பணிய மறுக்கவே, சபாநாயகர் கூட்டத்தைப் பதினைந்து நிமிஷம் ஒத்திவைத்து சபைக்காவலரின் உதவி கொண்டு அவரை வெளியேறச் செய்தார்.

இச்சம்பவம் நடைபெற்றபோது, கௌரவப்பார்வையாளர் கலரியில் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா, நீதிமந்திரி ஸாம். பி. ஸி. பெர்னண்டோ, சுகாதாரமந்திரி திரு.ஏ. பி. ஜயசூரியா ஆகியோர் இருந்தனர்.

பண்டாரநாயக்கா கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட புத்தரகித்த தேரோவுக்கு கொழும்பு மத்திய தொகுதி அங்கத்தினர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன வழக்குச் செலவுக்கு பண உதவி செய்வதாக வதந்திகள் அடிபட்டுவந்தன என்று மந்திரி திரு. கலுகல்லே குற்றஞ்சாட்டியதைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதத்தின் போதுதான் இச் சம்பவம் நிகழ்ந்தது. மந்திரியின் இக்குற்றச்சாட்டை திரு. ஜயவர்த்தன ஆட்சேபித்ததுடன் வாபஸ் பெறுமாறு மந்திரியை இருமுறை கேட்டுக்கொண்டார். சபாநாயகர் திரு. ஜயவர்த்தனவின் ஆட்சேபனையை ஏற்கவில்லை. மூன்றும் முறையும் இக்குற்றச்சாட்டை கொழும்பு மத்திய தொகுதி அங்கத்தினர் ஆட்சேபித்ததுடன் தாம் 1956ம் ஆண்டுக்குப்பின் புத்தரக்கித்த தேரோவைச் சந்தித்ததே கிடையாது என்றும் கூறினர்.

இக்கட்டத்தில் நடைபெற்ற காரசாரமான விவாதத்தின் போதுதான் திரு. ராபர்ட்டை வெளியேற்ற 15 நிமிடம் சபையைச் சபாநாயகர் ஒத்திவைத்தார். அதன்பின் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

அரசாங்க பள்ளிக்கூட அதிபர்களுக்கு

## வித்தியாதிபதி எச்சரிக்கை

### வகுப்பு நாட்களைக் குறைத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்

கொழும்பு, வியாழன்

ஏதாவது காரணத்தை முன்னிட்டு பள்ளிக்கூட நாட்களில் நடைபெறாத வகுப்புகளை, வேறு நாட்களில் நடத்தாவிட்டால் அதிபர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என வித்தியாதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஏதேனும் ஒரு காரணம் பற்றி பள்ளிக்கூட நாட்களில் வகுப்புகள் நடைபெறாது விடின், அந்நாட்களுக்குப் பதிலாக வேறு நாட்களில் அவ்வகுப்புகளை நடத்த அரசாங்கப் பள்ளிக்கூட அதிபர்கள் தவறினால் அவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென சகல அரசாங்கப் பள்ளிக்கூட அதிபர்களுக்கும் வித்தியாதிபதி எச்சரிக்கை செய்துள்ளார்.

இவ்வகுப்புகள் பள்ளிக்கூடங்களில் சரிவர நடைபெறுகின்றனவா என்பதை அறிய அவசியமேற்படின் அங்கு திடீர் விஜயம் செய்யுமாறு கல்வி அதிகாரிகளுக்கும் வட்டாரப் பரிசோதகர்களுக்கும் வித்தியாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இவ்வகுப்புகள் பெற்றோருக்கோ, அன்றேல் மாணவர்களுக்கோ சிரமங்கொடாதவகையில் நடைபெறவேண்டுமென வித்தியாதிபதி மேலும் தமது சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## மாநகர சபை இன்று கூடுகிறது

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாநகர சபையின் விசேஷ கூட்டமொன்று இன்று 2 மணிக்கு நடைபெறுமென அறிவிக்கப் பட்டுள்ளது, மேயர் இல்லாத காரணத்தால் அவரதும் உள்ளூராட்சி ஆணையாரதும் உத்தரவின் படி நடைபெறும், இக்கூட்டத்தில் அதிகாரக் கையளிப்பு வழங்குவது சம்பந்தமாக மாத்திரம் ஆலோசிக்கப் படுமெனத் தெரிகிறது.

இக் கூட்டத்திற்கு உதவி மேயர் திரு. என். ரி. செல்லத்துரை தலைமை வகிப்பார், யாழ்ப்பாணம் மாநகரசபைக் கூட்டங்களுக்கு உதவி மேயர் தலைமை வகிக்கும் அரிய சந்தர்ப்பங்களில் இது இரண்டாவது என அறியவருகிறது.

## ரஷ்ய யோசனை பற்றி மேற்கு நாடுகள் ஆலோசனை

ஜெனிவா, மே 18

ரஷ்யவெளி நாட்டு மந்திரி திரு. குரோமிகோ, நேற்று வெளியிட்டுள்ள யோசனைபற்றி இன்று பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளின் வெளிநாட்டுமந்திரிகள் ஆலோசனை நடத்தினர்.

## இராஜு குமாரசுவாமி நியூயோர்க் செல்வார்

கொழும்பு, மே 18

ஐக்கிய நாட்டிலுள்ள தொழில் நுட்ப உதவிச் சபையின் நிகழ்ச்சி அதிகாரியாகப் பதவியேற்க இருக்கும் திரு. இராஜு குமாரசுவாமி, அரசாங்கத்துடனுள்ள தனது சேவைகளை நிறுத்திக்கொள்வதென்று தீர்மானித்துள்ளார்.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் முதல் திகதியிலிருந்து தனது வேலைகளை நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாட்டு அலுவலகத்தில் ஆரம்பிப்பார் எனத் தெரிகிறது.

இலங்கையை விட்டு வெளிநாடுகளில் பதவி ஏற்கும் எந்த அரசாங்க ஊழியரும் பொதுச் சேவைகளிலிருந்து ஓய்வு பெற வேண்டும் அல்லது இராஜினாமாச் செய்யவேண்டுமென அண்மையில் அரசாங்கம் தெரிவித்திருந்தது.

இதனாலேயே திரு. குமாரசுவாமி தனது அரசாங்க சேவைகளிலிருந்து விலகிக் கொள்ளத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

## காசோலைகளில் சிங்களம், தமிழ்

கொழும்பு, வியாழன்

நேற்று ஜனப்பிரதிநிதிகள் சபையில்நாணயப்பரிவர்த்தனை திருத்தமசோதாவை 2ம் முறை அங்கீகாரத்துக்கு நிதி மந்திரி சமர்ப்பித்தார். இதன்படி காசோலைகளிலும், வர்த்தக தஸ்தாவேஜுகளிலும் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் இடம்பெறும். சபை இதை ஏகமனதாய் அங்கீகரித்தது. மசோதாவின் 3 கட்டங்களும் நிறைவேறியது.

## மாஸ்கோவில் இந்திய உணவு மந்திரி

மாஸ்கோ, மே 18

இந்திய உணவு மந்திரி திரு. எஸ். கே. பட்டீல் இன்று மாஸ்கோவந்துசேர்ந்தார்.

## டில்லியில் அமெரிக்க உப ஜனாதிபதி

### பிரதம மந்திரி நேருவுடன் சம்பாஷணை

புதுடில்லி, மே 18

அமெரிக்க உபஜனாதிபதி திரு. லின்டன் ஜான்ஸன் இன்று புதுடில்லி வந்துசேர்ந்தார். பாங்காக்கிலிருந்துவந்த அவரை உபராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், பிரதமர் நேரு ஆகியோர்வரவேற்றனர்.

விமான நிலையத்தில் அவர் பேசுகையில், "சமாதான வழியில் இந்தியா சுதந்திரம் அடைந்தது. தொடர்ந்து அதே கொள்கையைப் பின்பற்றிவருவருகிறது. அமெரிக்காவும் இந்தியாவும் வெவ்வேறு பாதைகளில் சென்றபோதிலும் ஒரே லட்சியத்தை நோக்கியே முன்னேறுகின்றன" என்றார்.

இந்தியாவின் வளர்ச்சியில் ஜனாதிபதி கெனடி விசேஷ அக்கறை காட்டுகிறார் என்றும் திரு. ஜான்ஸன் தெரிவித்தார். பின், டாக்டர் ராதாகிருஷ்ணன், பிரதமர் நேரு ஆகியோருடன் அவர் ராஷ்டிரபதிபவனத்திற்கு காரில் பிரயாணமானார்.

### நேருவுடன் பேச்சு

இன்று பிற்பகல் பிரதமர் நேருவுடன் திரு. ஜான்ஸன் சம்பாஷணை நடத்தினர். 3ம் ஐந்தாண்டுத் திட்டம் பற்றித் தாங்கள் பேசியதாய் சம்பாஷணை முடிவில் ஸ்ரீநேரு நிருபர்களிடம் கூறினர்.

தாம் ஜனாதிபதி கெனடியிடமிருந்து பிரதமர் நேருவுக்கு ஒரு கடிதம் கொண்டுவந்து கொடுத்ததாய் திரு. ஜான்ஸன் கூறினர்.

## தென்கொரியப் பிரதமர் ராஜினாமா செய்தார்

### நாடு முழுதும் புரட்சி ராணுவத்திடம் வந்துவிட்டது

ஸியோல், மே 18

தென்கொரியாவில் ஜான் சாங் மந்திரிசபை ராஜினாமாச் செய்துவிட்டது. பிரதமர் ராஜினாமாச்செய்தபின் புரட்சிக்கமிட்டித் தலைவர்களிடம் சென்று அவர்களுடன் சம்பாஷித்தார். ராஜினாமாச்செய்த பிரதமரை வீட்டுக்குப்போக புரட்சிக்கமிட்டி அனுமதித்தது.

இன்று கடல், விமான,ஆகாயப்படைத் தலைவர்கள் சந்தித்து புதிய ராணுவக்கமிட்டிக்குத் தங்கள் ஆதரவைத் தெரிவித்துக்கொண்டனர். புதிய நடவடிக்கையின் பயனாய் தென்கொரியா முழுவதும் புரட்சி ராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டது. உரிய சமயத்தில் ஆட்சிப்பொறுப்பை சிவில் தலைவர்களிடம் ஒப்படைத்துவிடப்போவதாய் ராணுவப் புரட்சிக்கமிட்டித் தலைவர் உறுதிகூறினர். சர்வதேசக்கடமைகளை தென்கொரியா மதித்து நடக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். இன்று 3 பத்திரிகாசிரியர்கள் ஸியோலில் கைதுசெய்யப்பட்டனர்.

அமெரிக்க உதவிவெளிநாட்டு மந்திரி திரு.செஸ்டர் பௌல்ஸ் புரட்சி ராணுவத் தலைவர்களின் கொள்கை அறிக்கையை வரவேற்றார்.

### மணிவாக்கு

பாதரசம் பூசிய கண்ணுடியில் ஒருவரின் முகம் பிரதிபலிக்கும் அதேபோல சக்தியையும் தூய்மையையும் காப்பாற்றிக்கொண்டிருப்பவரின் உள்ளத்தில் இறைவனின் திருவுருவம் பிரதிபலிக்கும்.


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு வைகாசி மீ 6 உ (19-5-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## தென் கொரிய புரட்சி

தென் கொரியாவில் ஜனநாயகம், மிகுந்த இன்னல்களுக்குள்ளாகிவருகின்கிறது. அங்கு சிங்மன் ரீயின் தலைமையில் நடைபெற்ற ஆட்சி பெயரளவில் ஜனநாயகம் என்று சொல்லிக்கொண்டது. ஆனால் உண்மையான ஜனநாயக ஆட்சி அங்கு நிலவியதாக எவரும் நம்பவில்லை. சிங்மன்ரீயின் உளுத்துப்போன ஆட்சி கவிழ்ந்தகாலத்தில் தென்கொரிய மக்கள் உண்மையாகவே மகிழ்ச்சியடைந்தனர். புதிய ஜனநாயகக்கட்சியின் ஆதிக்கத்தில் நாடுபலவகையிலும் சிறப்புறுமென அவர்கள் எதிர்பார்த்திருந்தனர். ஆனுல் அவர்கள் எதிர்பார்த்த அளவுக்குப் புதிய ஜனநாயகக்கட்சி நாட்டு மக்களின் நலனில் அக்கறை காட்டவில்லை. போதாக்குறைக்குப் புதிய கட்சிக்குள்ளேயே போட்டியும் பொருமையும் ஏற்பட்டு அக்கட்சியே இருகூருகிவிட்டது.

பழைய சம்பிரதாயங்களை ஆதரிப்பவர்கள் யூம் போசன் என்பவரின் தலைமையை விரும்பி அவரை ஆதரித்து நிற்கின்றனர். கொஞ்சம் முற்போக்கான கொள்கைகளை ஆதரிக்கும் புதுமை விரும்பிகளுக்கு டாக்டர் ஜோன் மியூன் சாங் தலைவரானுர்.

சிங்மன்ரீயின் ஆதிக்கம் ஒழிந்த பின்னரும் கொரியாவில் அரசியல் சூழ்ச்சிகளே நாளாந்த நிகழ்ச்சிகளாகவிருந்தன. புரட்சிகளும் மக்களின் கிளர்ச்சிகளும் நாட்டின் அமைதிக்கும் சமாதானத்துக்கும் பங்கம் விளைவித்துக்கொண்டே வந்தன. பிரதிநிதிகள் சபையிற்கூட அங்கத்தவர்களின் நடத்தையும் பேச்சுவார்த்தைகளும் கண்ணியமான முறையில் இருக்கவில்லை. அரசியற் கட்சிகளிடையே பிளவு ஏற்படுமானுல் எந்த நாட்டிலும் நிலையான ஆட்சி தொடர்ந்து நடைபெற முடியாது. தென் கொரியாவும் இதற்கு விதிவிலக்கல்ல.

அங்கு ஏற்பட்டுள்ள திடீர் புரட்சியும் அதனைத்தொடர்ந்து இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றியிருப்பதும் நல்ல அறிகுறிகள் அன்று. எதிர்ப்புக்கள் எதுவுமின்றியே இராணுவத்தினர் முழு அதிகாரத்தையும் கைப்பற்றியிருக்கின்றனர். டாக்டர் சாங் கட்சியின் கொள்கைகளை எதிர்க்கும் இப்புரட்சிக்காரர் அமெரிக்காவுடனும் கொம்யூனிஸ்ட் எதிர்ப்பு நாடுகளுடனும் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளப்போவதாய்க் கூறியிருக்கின்றனர். டாக்டர் சாங்கின் அரசாங்கத்தை அமெரிக்கா ஆதரித்து நிற்பதைப் புரட்சிக்காரர் அறியார் போலும். தென் கொரியாவில் அமைதி ஏற்படவேண்டுமென்பதே அங்குள்ள மக்களின் பிரார்த்தனையாக இருந்து வருகின்றது. இப்போது கிளம்பியுள்ள திடீர் புரட்சி புதிய சிக்கல்களை உண்டாக்குமாயின் அதனுல் ஆசியாதான் பெரிதும் பாதிக்கப்படும்.

இத்தலையங்கத்தை எழுதும்போது தென் கொரியாவின் சகல பாதுகாப்புப் படைகளும் புரட்சி இராணுவக் குழுவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாய்ச் செய்தி கிடைத்துள்ளது. தலைமறைவாயிருந்த பிரதமர் ராஜிஞமாச்செய்ததைத்தொடர்ந்து, புரட்சி இராணுவக் குழுவின் ஆதிக்கத்தின் கீழ் நாட்டின் பூரண கட்டுப்பாடும் வந்துவிட்டது. அமெரிக்க உதவி வெளிநாட்டு மந்திரி திரு. செஸ்டர் பௌல்ஸ் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில், புரட்சிக் குழு விடுத்துள்ள கொள்கை அறிக்கையை வரவேற்றிருப்பது அமெரிக்காவின் கொள்கை மாற்றத்தைக் குறிக்கிறதா என்ன என்பது தெரியவில்லை. சர்வதேச ஒப்பந்தங்களை தென் கொரியா மதித்து நடக்குமென்றும், உரிய காலத்தில் சிவில் தலைவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிடுவதென்றும் புரட்சி இராணுவத் தலைவர் கூறியிருப்பது ஓரளவு நம்பிக்கையை ஏற்படுத்தியிருப்பினும், ஜனநாயகம் துரிதமாக அங்கு நிலைநாட்டப்படுவதில் புரட்சிக் குழு ஆவன செய்யவேண்டும் என அனைவரும் எதிர்பார்க்க உரிமை உண்டு.

# பத்திரிகைகளை அரசாங்கம் எடுக்கும்

—பீலிக்ஸ்

# தமிழர்களுடன் பேச்சு வார்த்தை நடத்துக

—தஹநாயக்கா

கொழும்பு, வியாழன்

“அவசரகால நிலைமையை நான் விரும்பவில்லை' இரத்த ஆறு ஓடுவதையும் நான் விரும்பவில்லை. அவசியம் ஏற்பட்டாலன்றி அவசரகால சட்டத்தின் கீழ் ஆட்சிபுரிவதும் நல்லதல்ல" என்று நிதிமந்திரியும், பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் பார்லிமெண்டரிக் காரியதரிசியுமான திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா நேற்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் கூறினுர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் நேரத்தைக் குறைப்பது பற்றி அரசாங்கம் பரிசீலனைசெய்து வருவதாகவும் திரு. பண்டாரநாயக்கா கூறினுர்.

அவசரகாலச் சட்டத்தின் கீழுள்ள சட்டவிதிகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டும்தான் அமுல்நடத்தப்படவேண்டுமென்றும் இதரபகுதிகளில் வெளியீடுகளுக்குப் பூரண சுதந்திரம் இருக்க வேண்டுமென்றும் கோரும் எதிர்க்கட்சியினரின் பிரேரணையொன்றின் மீது நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளிக்கையிலேயே நிதி மந்திரி மேற்கண்டவாறு கூறினுர்.

எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த இப் பிரேரணைக்கு திரு. டட்லி சேனநாயக்கா, திரு. டபிள்யு. தஹநாயக்கா, திரு. பிலிப்குணவர்த்தன, திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, திரு. கே. எம். பி. ராஜரத்தின ஆகியோர் கைச்சாத்திட்டிருந்தனர்.

ஜனப்பிரதிநிதிகள் சபை, சபாநாயகர் திரு. ஆர். எஸ். பெல்பொல தலைமையில் நேற்றுக் கூடியபொழுது அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலம் நீடிக்கும் கவர்னர் ஜெனரலின் பிரகடனத்தை சபாநாயகர் சபையில் வாசித்தார்.

அவசரகாலச் சட்ட விதிகள் யாழ்ப்பாணம், வவனியா, மன்னுர், திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய நிர்வாக மாவட்டங்களில்மட்டுமே அமுல் நடத்தப்படவேண்டுமென்றும் இதன்படி இதர நிர்வாக மாவட்டங்களில் வெளியீட்டுச் சுதந்திரம் வழங்கப்படவேண்டுமென்றும் கோரும் பிரேரணையை திரு. தஹநாயக்கா கொண்டுவந்தார்.

பிரேரணையைக் கொண்டு வந்து திரு. தஹநாயக்கா பேசுகையில் இப்பிரேரணைக்கு ஒரு மாதத்துக்கு முன்னரே முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தும் மீண்டும் ஒரு மாத காலத்துக்கு அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை நீடித்துள்ளது என்ருர்.

“முக்கியமான சம்பவங்கள் எதுவும் நிகழ்ந்தாலன்றி நிலைமைபற்றி அறிக்கைவிட மாட்டோம்" என்று நேற்று பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் பார்லிமெண்டரிக் காரியதரிசி அறிவித்தார். ஆனுல் அவரின் அறிக்கை கவர்னர் ஜெனரலின் பிரகடனத்துக்கு மாருக இருக்கிறது" என்று திரு. தஹநாயக்கா கூறினுர். நாட்டின் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறுகிறது என்று குறிப்பிட்ட திரு. தஹநாயக்கா “அப்படியானுல் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதம் ஏன் நீடிக்கவேண்டும்?" என்று கேட்டார்.

மூதூர் தொகுதி பார்லிமெண்ட் உபதேர்தலைத் தள்ளிப்போட்டது பற்றிக் குறிப்பிட்ட திரு. தஹநாயக்கா வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கிராமச் சங்கத் தேர்தல்கள் பலவற்றை ஸ்தல ஸ்தாபன அமைச்சர் ஒத்திவைத்துள்ளாரென்ருர். பார்லிமெண்ட் உபதேர்தலைத் தள்ளிப் போட்டது இலங்கை அரசியல் சாசனத்துக்கு முரணனது என்று திரு. தஹநாயக்கா கூறினுர்.

### குழப்பம் ஏதும் உண்டா?

“வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குழப்பம் ஏதும் உண்டா? சட்டவிரோதமாகக் கூட்டம் கூடப்பட்டதா? தீயிடுதல், கொள்ளை அடித்தல் போன்ற சம்பவங்கள் ஏதும் உண்டா?" என்று திரு. தஹநாயக்கா கேட்டார்.

இக் கேள்விக்கு பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் பார்லிமெண்ட் காரியதரிசி நேற்று சரியான பதில் கூறிவிட்டார். மேற்கொண்டு அறிக்கைகள் வெளியிடப்படமாட்டாதென்று பார்லிமெண்ட் காரியதரிசி அறிவித்து விட்டார் என்று திரு. தஹநாயக்கா கூறினுர்.

அவசரகாலச் சட்டம் ரத்துச் செய்யப்பட வேண்டுமென்று தாம் கருதுவதாகக் கூறிய திரு. தஹநாயக்கா, வடக்கு கிழக்கு மாகாணங்களில் குழப்பம் ஏற்படுமென அரசாங்கம் எதிர்பார்த்தால் வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த இதர இடங்களில் அவசரகால நிலையை நீக்கிவிடலாமென்று கூறினுர்.

இதன்பின் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்த நேர்ந்த சம்பவங்களை திரு. தஹநாயக்கா எடுத்துக் கூறினுர். மேலும் ஒரு வருஷத்துக்கு அவசரகால நிலைமை நீடிக்குமெனக் கூறப்படுவதாக திரு. தஹநாயக்கா குறிப்பிட்டார்.

### மக்கள் மறக்கமாட்டார்கள்

“அரசாங்கத்தின்மீது வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்குப் பெரும் குறை இருக்கிறது. அவர்களுக்கு இழைக்கப்பட்ட தவறுகளை அவர்கள் சந்ததிசந்ததியாக மறக்கமாட்டார்கள்" என்று திரு. தஹநாயக்கா கூறினுர்.

தேநீர் இடைவேளைக்குப்பின் சபை மீண்டும் கூடியபோது திரு. தஹநாயக்கா தொடர்ந்து பேசினுர். அவர் குறிப்பிட்டதாவது:

அரசாங்கத்துக்கும் தமிழர்களுக்குமிடையில் நிலவும் கருத்து வேற்றுமைகள் மனக்கசப்பானவை. அவசரகால நிலைமையின்போது இராணுவத்தினர் மிதமிஞ்சி நடந்துகொள்வது புதிய விஷயமல்ல என்று அரசாங்கம் கூறியது. இதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் இராணுவத்தினர் நல்லமுறையில் நடந்துகொள்ளவேண்டும். வடமாகாணத்துக்கு ராணுவம் அனுப்பப்பட்டபோது தமிழ் அதிகாரிகளையும், தமிழ் சிப்பாய்களையும் அனுப்ப வேண்டாமென உத்தரவிடப்பட்டது. அட்டூழியம் செய்யும்படியும் ராணுவத்திற்கு உத்தரவிடப்பட்டிருந்தது. தமிழ் மக்களின் தைரியத்தையும், உணர்ச்சியையும் உடைக்க குறிப்பிட்ட வழியில் நடந்துகொள்ளுமாறு ராணுவத்திற்கு உத்தரவிடப்பட்டதாய்த் தோன்றுகிறது.

### தமிழர்களுடன் சமாதானத்துக்கு வருக

பாதுகாப்பு வெளிவிவகார மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி எதிர்காலத்தில் “தமிழர்களுக்கு தீங்கிழைத்தவர்" எனப் பெயர்பெற விரும்புருரா? இவ்வித மனப்பான்மையினுல் எவ்வித பயனுமில்லை. தாமதமின்றித் தமிழர்களுடன் ஒரு சமாதான முடிவுக்கு வருவதற்கான சூழ்நிலையைச் சிருஷ்டிக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஒருமாதம் அவசரகாலச் சட்டத்தை நீடித்தது அவர்களுக்குக் கஷ்டத்தை அளித்துள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு ஒரு தடவையாவது டெலிபோன் பேச என்ருல் முடியவில்லை. கவர்னர்-ஜெனரலுக்கும், பிரதம மந்திரிக்கும் மட்டுமே வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு டெலிபோன் பேசமுடியும் எனக் கூறப்பட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள காரியாலயங்களுக்கு அனுப்பிய தந்திகளுக்குக்கூட எனக்குப் பதில் கிடைக்கவில்லை. எனது அபிப்பிராயத்தில் நாட்டின் எப்பகுதியிலும் தணிக்கை இருக்கவேண்டுமென நான் நினைக்கவில்லை.

### ராஜதந்திரம் தேவை

இன்றைய நிலைமையில் உயர்தர ராஜதந்திரம்தான் தேவை. தமிழரசுக் கட்சித் தலைவர்கள் தாம் பிரிந்துபோக வேண்டுமெனகேட்பதுஉண்மை. ஆனுல் தமிழர்களை அவ்வாறு கேட்கவைக்க அரசாங்கத்தின் கொள்கைதான் காரணம் என்பதும் உண்மை. அரசாங்கம் தமிழர்களுடன் ஒரு பேச்சுவார்த்தை நடத்தி மீண்டும் நாட்டில் அமைதியை ஏற்படுத்தவேண்டும்."

### ஜே. ஆர். பேச்சு

திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன பிரேரணையை ஆதரித்துப்பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: “அவசரகால நிலையை விரும்பும் சிலர் அரசாங்கத்தில் இருக்கின்றனர். ஆதிக்க வெறிகொண்ட இவர்கள் எதிரிகளை ஒழித்துக்கட்ட ஒரு சந்தர்ப்பமாகவே அவசரகால நிலையை விரும்புகின்றனர்.

அவசரகாலச்சட்டம் போடப்பட்ட சமயத்தில் அது அவசியம் என்பதுதான் ஐக்கிய தேசியக் கட்சியின் கருத்து. ஆனுல் நாடு முழுவதும் இப்போது அது இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. செய்திப் பிரசுரங்களைக் கட்டுப்படுத்துவது நியாயமல்ல.

தகுதிபெற்ற அதிகாரி திரு. டப்ளியூ. எஸ். பெர்னுண்டோ பொதுஜனப் பாதுகாப்புச்சட்டத்தின்கீழ் பத்திரிகைப் பிரசுரம்பற்றிச் சில உத்தரவுகள் விடுத்திருக்கிருர். அந்த உத்தரவில் சத்தியாக்கிரகம் பற்றிய செய்திகளை மட்டும் தடைசெய்ததாகக் கூறப்படவில்லை. சமூக வாழ்க்கையின் ஒவ்வொரு விஷயத்தையும் பாதிக்கும்படி இத்தடை விஸ்தாரமாய் அமைந்திருப்பதாகத் தோன்றுகிறது.

ஒரு தனிப்பட்டவர் அல்லது அரசாங்கத்துக்கு அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேதினக் கூட்ட அறிக்கைகள் தணிக்கை செய்யப்பட்டது இதற்கோர் உதாரணமாகும்.

தகுதிபெற்ற அதிகாரியின் ஆதிக்கம் வடக்கு, கிழக்கு மாகாணத்துடன் கட்டுப்படுத்தப்படவேண்டுமென்பதே இப்பிரேரணையின் சாரம். இதர மாகாணங்களில் இந்த அதிகாரம்உபயோகிக்கப்படக்கூடாது என்பதே அதில் அடங்கியுள்ளது.

அரசாங்கம் சில அதிகாரங்களை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் இருந்தன. ஆனுல் சில அரசாங்க அங்கத்தினர்கள் அவசரகால நிலை இல்லாமலே இந்த அதிகாரத்தை மேற்கொண்டிருந்தனர். சிம்மாசனப் பிரசங்கத்தில் பத்திரிகைகளை அரசாங்கம் மேற்கொள்வதுபற்றிக் கூறியிருந்தது தெரியும்.

### ஒலிபெருக்கிகள்

ஒலிபெருக்கிகளைத் தடைசெய்ய சட்டவிரோதமான உத்தரவு போடப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சிதான் இந்த உத்தரவை உடைத்தது. பார்லிமெண்ட் கூட்ட நடவடிக்கைகளை பொதுமக்களுக்குத் தெரிவிக்காமலிருக்க தகுதிபெற்ற அதிகாரியினுல் தணிக்கைசெய்யும் முயற்சி நடந்தது.

இன்று 'டெம்பிள்ட்ரீஸ்'மாளிகைக்குப்பின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் “'யுத்தம்" பற்றி செய்தி வெளியிடும் ஒரு கட்டுப்பாட்டு அறை இருக்கிறது. இராணுவம் பிரதமமந்திரியின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கிறது. நிதி மந்திரி ஒரு 'குட்டி நெப்போலியன்' ஆக நினைத்துக்கொண்டிருப்பதாகக் கேள்விப் பட்டேன். சில ராணுவ அதிகாரிகளுடன் அவர் சதி செய்து பார்லிமெண்டை நிறுத்திவைக்கவும், தனது பொறுப்பில்—“பொம்மைப் பிரதம"ருடன் அதிகாரத்தைப் பெற முயல்கிருர் என்றும் அறிந்தேன். இவை வதந்திகள். ஆனுல் உண்மையாயும் இருக்கலாம். நடந்திருக்கும் சில சம்பவங்களே இதற்கு உதாரணமாய் இருக்கின்றன.

பண்டாரநாயக்கா கொலை சம்பந்தமான கமிஷன் பற்றிப் பேசப்படுகிறது. நிதிமந்திரியின் மூளையிலிருந்தே இது வந்தது. அவர் மனதிலிருப்பது இப்போது வெட்டவெளிச்சமாகிவருகிறது.

படுகொலை விசாரணை ஒன்று நடக்குமானுல் திரு. பண்டாரநாயக்காவின் நெருங்கிய சகாக்கள் சிலர் கைதிக்கூண்டில் இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனுல் திரு. டட்லி சேனநாயக்கா, திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, திரு. டபிள்யூ. தஹநாயக்கா, ஸ்ரீமதி விமலா விஜயவர்த்தன முதலியோரைக் கூண்டில் ஏற்ற ஒரு கமிஷனை அமைக்க முடியும் என திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா மந்திரிசபையில் கூறியிருக்கிருர்.

“சிங்கள" பத்திரிகை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பத்திரிகையாகும். ஆனுல் தகுதி பெற்ற அதிகாரியின் பிரசுர

(6-ம் பக்கம் பார்க்க)

# கதிர்காமத்தைப் புனித ஸ்தலமாகப் பாதுகாக்கும் திட்டம்

## திட்டக்கமிஷன் அங்கீகாரம்

கொழும்பு, வியாழன்

கதிர்காமத்தை புனிதஸ்தலமாகப் பிரகடனப்படுத்துவதற்கான உறுதியான ஒரு திட்டத்தை மத்தியதிட்டக் கமிஷன் அங்கீகரித்துள்ளது. இத்திட்டம் விரைவில் ஸ்தலஸ்தாபன வீடமைப்பு மந்திரி திரு மகாநாம சமரவீராவிடம் விரைவில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

இதன்பின் கதிர்காமத்தை புனிதஸ்தலமாகப் பாதுகாக்கும் திட்டத்தின் பிரதிகள் கதிர்காமத்திலும் மாகாணக் கச்சேரிகளிலும் பார்வைக்கு வைக்கப்படும். இத்திட்டத்துக்கு மந்திரி இறுதியாக அங்கீகாரம் அளிப்பதற்குமுன்பாக பொதுமக்கள் அதற்கு ஆட்சேபம் எதுவும் தெரிவிக்க விரும்பினுல் அதை திட்டக் கமிஷனுக்கு வசதியளிக்குமுகமாகவே இப் பிரதிகள் கச்சேரிகளில் பார்வைக்கு வைக்கப்பட விருக்கிறது.

கட்டிடம் அபிவிருத்தி, கதிர்காமம், செல்லக்கதிர்காமம், வெடிஹிட்டிகண்டே ஆகிய மூன்று இடங்களையும் புனிதஸ்தலங்களாகப் பிரகடனப்படுத்துவது ஆகியவைகளுக்கு இந்த நகல் திட்டம் வசதியளிக்கிறது.

கதிர்காமத்தில் கிரிவிகாரை, டாகபா, தெய்வானை அம்மன் கோயில், மகா தேவாலயம் ஆகியவைகளைத் தவிர அங்குள்ள இதர கட்டிடங்கள் எல்லாவற்றையும் அகற்றுவதற்கு இந்த நகல் திட்டம் வசதியளிக்கிறது.

செல்லக் கதிர்காமத்தில் பழைய மூன்று கோயில்கள் மட்டுமே இருப்பதற்கு அனுமதிக்கப்படும்.

வெடிஹிட்டி கண்டேயில் கணதேவிகோயில் மட்டுமே இருக்கும் என்ருலும் பழைய கோயில் உள்ள இடத்தில் புதிய கோயில் அமைப்பதற்கு அனுமதியளிக்கப்படும்.

மாணிக்க கங்கையின் வலது கரையில் புதிய அபிவிருத்திப் பகுதியொன்று அமைக்கப்படும். இந்த இடத்தில் கடைகள் கட்டவும் அரசாங்கக் கட்டிடங்கள் நிறுவவும் வாகனங்கள் நிற்பாட்டுவதற்கான இடவசதி செய்யவும் ஒழுங்கு செய்யப்படும்.

### இராமகிருஷ்ண மடம்

இராமகிருஷ்ணமடம் இடிக்கப்படமாட்டாது. ஆனுல் இந்த மடத்தின் ஒரு பகுதி நிர்வாக நிலையமாகவும் மற்ருெரு பகுதி தேவாலயத்துக்குக் காணிக்கையாக வழங்கப்பட்ட பொருள்கள் காட்சிக்கு வைக்கப்படுவதற்கு உபயோகிக்கப்படும்.

இராமகிருஷ்ண சங்கத்தினருக்கு வேறு ஒரு இடம் வழங்கப்படும்: இப்பொழுது பாலத்தின் அருகில் கப்புருளைகளுக்கு இடம் கொடுக்கப்படும். வேருெரு பெரிய பாலம் சிறிது தூரத்தித் அமைக்கப்படவிருக்கிறது.

இப்பகுதிகளையும் நகர அபிவிருத்திப் பகுதிகளையும் தவிர்ந்த நிலங்கள் விவசாயத்துக்குரிய இடங்களாகவும் வனங்களாகவும் பிரகடனப்படுத்தப்படும்.

வலது கரையில் திஸ்ஸ மகாராமைக்கும் கதிர்காமத்துக்கும் இடையிலுள்ள வீதி 100அடிஅகலத்துக்குவிஸ்தரிக்கப்படுவதுடன் இரு மருங்கிலும் மரங்கள் நடப்படும். இத் திட்டத்துடன் சேர்ந்த கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

# பஸ்ஸில் பிரயாணம் செய்த வைத்தியர் மரணம்

## அவர் கொண்டு சென்ற 'சூட்கேஸில்' கஞ்சா!

மட்டக்களப்பு, புதன்

பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபொழுது சுகவீனமுற்ற நிந்தவூரைச்சேர்ந்த முகம்மது ஹனிபா என்பவர் மட்டக்களப்பு பஸ் நிலையத்தில் பஸ்ஸிலிருந்து இறக்கப்பட்டதும் மரணமானுர். ஸ்தலத்துக்கு வந்த பொலிசார் முகம்மது ஹனிபாவின் சடலத்தை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றனர். அவர் வைத்திருந்த குடையையும் பூட்டுப்போட்டுப் பூட்டப்பட்டிருந்த சூட்கேசையும் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

ஹனிபாவின் மரணம்சம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. வி. இளையதம்பி மரணவிசாரணை நடத்தினுர். ஹனிபாவின் மனைவி அலிமா கண்[illegible]ாட்சியமளிக்கையில் [illegible]து கணவர் ஒரு ஆயுர்வேத வைத்தியர் என்று கூறினுர். தனது கணவருக்கு வலி வருவதுண்டென்று கூறிய அலிமா கண்டு, சூட்கேஸ் தனது கணவருடையது என்று அடையாளம் காட்டினுர். அது பூட்டப்பட்டிருந்ததால் அதனுள்ளிருப்பது பற்றித் தனக்குத் தெரியாதென்ருர்.

பனிச்சங்கேணிக்கும் வெருகலுக்குமிடையில் ஹனிபாவுக்கு வலிவந்ததாக பஸ்சாரதி தெரிவித்தார். வெருகலில் ஹனிபாவின் நண்பர் ஒருவர் ஹனிபாவை மட்டக்க்ளப்புக்கு அதே பஸ்ஸிலேயே கொண்டு வருவதற்குத் தீர்மானித்தாரென்று சாரதி கூறினுர்.

வைத்திய பரிசோதனை அறிக்கையின்படி தீர்ப்பளித்த மரணவிசாரணை அதிகாரி பூட்டை உடைத்து சூட்கேசைத் திறக்கும்படி உத்தரவிட்டார். சூட்கேஸின் உள்ளே கஞ்சா இருக்கக் காணப்பட்டது. கஞ்சாவை மட்டக்களப்பு நீதவான் முன் சமர்ப்பிக்கும்படி மரணவிசாரணை அதிகாரி உத்தரவிட்டார்.

---

# மயானம் அமைக்கும் திட்டம்

கொழும்பு வியாழன்

நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமச் சங்கப் பகுதிகளிலும் ஒவ்வொரு மயானம் அமைக்கும் திட்டத்தை அமுல் நடத்த மத்திய அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்துக்கென ஒவ்வொரு வருஷமும் ஒரு லட்சம் ரூபாய் செலவிடுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இவ்வருடத்தில் மாத்தறை, மட்டக்களப்பு, அனுராதபுரம், பொலன்னறுவை ஆகிய பகுதிகள் பயனடையும்.

# லாவோஸ் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு

## ஜெனிவா மகாநாடு அளிக்கும் நம்பிக்கை

ஜெனிவா, மே 18

சர்வதேச உத்தரவாதத்துடன் லாவோஸ் ஒரு நடுநிலைமை நாடாக இருக்கவேண்மென்பதை லாவோஸ் சம்பந்தமாக ஜெனிவாவில் கூடியுள்ள 14 நாடுகளைக் கொண்ட சர்வதேசக் கமிஷன் மகாநாட்டில் பெரும்பாலான பிரதிநிதிகள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

ஜெனிவா மகாநாடு நேற்று இரண்டாவது தினமாக நடைபெற்றது. நேற்றைய மகாநாட்டில் லாவோஸின் வலது சாரிப் பிரதிநிதிகளும், தென் வியட்நாம், தாய்லாந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவில்லை.

லாவோஸ் பிரச்சினையை சுமுகமான முறையில் தீர்த்து அங்கு அமைதிநிலவ அமெரிக்க வெளிவிவகார மந்திரி திரு. டீன்றஸ்க்கும், ரஷ்ய வெளிவிவகார மந்திரி குரோமிக்கோவும் தங்கள் திட்டங்களை நேற்றைய மகாநாட்டில் சமர்ப்பித்தனர்.

நேற்றைய மகாநாட்டில் தோன்றிய சூழ்நிலையின்படி லாவோஸ் பிரச்சினைக்கு நல்ல முறையில் பரிகாரம் காணக் கூடுமென்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

### குரோமிக்கோவின் 2 அம்சங்கள்

மகாநாட்டில் ரஷ்ய வெளிவிவகார மந்திரி நேற்று விடுத்த அறிக்கையில் இரண்டு அம்சங்களைத் தெரிவித்தார்.

1. லாவோஸ் ஒருநடுநிலைமை நாடாக இருக்கவேண்டும். நடுநிலைமை பற்றி மகாநாடு தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். 2. லாவோசிலிருந்து அந்நிய இராணுவம் வெளியேற வேண்டும்.

இவைதான் குரோமிக்கோ தனது அறிக்கையில் குறிப்பிட்ட இரண்டு முக்கிய அம்சங்கள்.

லாவோஸ் நடுநிலைமைநாடாக்கப் பட்டதும் நடுநிலைமையை இந்த மகாநாட்டின் அங்கத்துவ நாடுகள் மதித்து நடத்த வேண்டும்என்று குரோமிக்கோ கூறினுர்.

லாவோஸ் நடுநிலைமை நாடாகியதும் தென் கிழக்காசிய பாதுகாப்பு ஒப்பந்த ஸ்தாபனம் லாவோசுக்கு பாதுகாப்பு அளிப்பதிலிருந்து விலகிக் கொள்ள வேண்டுமென்றும் லாவோசுக்கு புதிதாகத் துருப்புக்களை எந்த நாடும் அனுப்பக்கூடாதென்றும் குரோமிக்கோ கூறினுர்.

நேற்றைய மகாநாட்டில் லாவோசின் நடுநிலைமைப் பிரதிநிதி ஐந்து அம்சங்களைக் கொண்ட அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தார்.

லாவோஸ்நடுநிலைமைநாடாக்கப்படவேண்டுமென்றும் அந்நிய இராணுவம் லாவோசிலிருந்து வெளியேற வேண்டுமென்றும் லாவோசுக்கு ஆயுத உதவி நிறுத்தப்பட வேண்டுமென்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

நேற்றைய மகாநாட்டில் அமெரிக்க வெளிவிவகார மந்திரி திரு. டீன்றஸ்க் பேசுகையில் லாவோஸ் நடுநிலைமை நாடாக்கப்பட வேண்டுமென்றும் நடுநிலைமை என்ருல் என்ன? அது எவ்வாறுஅமைய வேண்டுமென்பது பற்றியும் இந்த மகாநாடு தெளிவாக்கிக் கொள்ள வேண்டுமென்றும் கூறினுர்.

லாவோசில் பூரணசண்டை நிறுத்தம் ஏற்படவேண்டுமென்றும் திரு. றஸ்க் கூறினுர்.

லாவோசுக்கு எல்லா இராணுவ உதவியும் ஒரே ஸ்தாபனத்தின் மூலம் வழங்கப்பட வேண்டுமென்று மகாநாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்தை அமெரிக்கா, கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகள் ஆதரிப்பதாகவும் ரஷ்யா ஒப்புக்கொள்ளவில்லையென்றும் அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

# கருவாட்டு வியாபாரம்

## எதிர்ப்பு இயக்கம்

கொழும்பு, வியாழன்

பிறப்பினுல் இலங்கையரல்லாதவர்கள் கருவாடு இறக்குமதி செய்வதற்கு எதிராக சில கருவாட்டு வியாபாரிகள் ஒரு இயக்கத்தையே ஆரம்பித்திருப்பதாகத் தெரிகிறது.

இந்த இலங்கையரல்லாத கருவாட்டு வியாபாரிகளை இரத்தத்தைஉறுஞ்சுவோர்" எனக் குறிப்பிட்டு எதிர்ப்பு இயக்கத்தினர் எம். பி. களுக்கு சுற்றுநிருபங்கள் அனுப்பியிருக்கின்றனர்.

கருவாடு இறக்குமதி செய்வோர் பெருந்தொகையான ரூபாய்நோட்டுக்களை வெளியே அனுப்புகின்றனர் என்று எதிர்ப்பு இயக்கத்தினர் குறறம் சாட்டியுள்ளனர்.

---

# நேபாளம் - ரஷ்யா கலாசாரஒப்பந்தம்

காட்மாண்டு, மே 18

நேபாளத்துக்கும் சோவியத் ரஷ்யாவுக்குமிடையில் கலாசார தொடர்பு ஒப்பந்தம் ஒன்று நேற்று காட்மாண்டுவில் கைச்சாத்தானது.

கலாஷேத்திரத்திலுள்ள கலா நிலையத்தின் தலைவர் இவர்.

கர்நாடக சங்கீதத்தில் புகழ்பெற்ற வாசுதேவாச்சார்யா சிறந்த பல கிருதிகளை ஆக்கியுள்ளார். இவரின் கிருதிகள் கர்நாடக சங்கீத வித்வான்கள் மத்தியில் பிரபலமாயுள்ளது. வாசுதேவாச்சார்யா தமது கலைத் திறனுக்காக சமீபத்தில் ராஷ்டிரபதியிடமிருந்து விருது பெற்ருர்.

---

கேம்பிரிட்ஜ, மே 18

இங்கிருக்கும் சிறையிலிருந்து தப்பியோடிய இரு பயங்கரக் கொலைகாரரைக் கண்டமாத்திரத்திலே சுட்டுவிடும்படி பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

எப்பொழுதும் உபயோகியுங்கள்

டால்மியாஸ்

★ போட்லந்து சிமெந்து

★ ஸ்டோன்வெயர் குழாய்கள்

★ பயர் பிறிக்ஸ்

செட்டிநாட்

கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்

116, 118, கெய்சர் வீதி,

கொழும்பு.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தர வாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணனந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.


# ஒருமாதத்தில் 217 'ஓசி'ப் பிரயாணிகள்

கொழும்பு, வியாழன்
1961-ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் 217 பேர் டிக்கட் இல்லாமல் ரயிலில் பிரயாணம் செய்ததாகக் கண்டுபிடிக்கப் பட்டது.

1960-ம் ஆண்டில் மாதமொன்றுக்கு சராசரி 296 பேர் டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்தனர்.

உயர்தர வகுப்புப்பெட்டிகளில் 139 பேர் டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்தனர். 153 பேர் தாங்கள் செல்ல வேண்டிய இடத்துக்கு பெற்ற டிக்கட்டுடன் அந்த இடத்துக்கு அப்பாலும் பிரயாணம் செய்ததாகக் கண்டுபிடிக்கப் பட்டனர்.

மேலதிகக்கட்டணம் உட்பட அபராதத் தொகையாக ரயில்வே 41,02 ரூபாய் 96 சதம் வசூலித்தது நீதிமன்றங்களில் பெப்ரவரி மாதத்தில் மட்டும் 156 ரூபாய் 10 சதம் அபராதம் விதிக்கப்பட்டது.

## ஆணாகமாறிய இளம் பெண்

கோவை, மே 18
கோவை மாவட்டத்தைச் சேர்ந்த வால்பாறையில் வசிக்கும் இராசம்மாள் என்ற 18 வயதுள்ள இளம் பெண் இப்போது ஆண்தன்மை அடைந்துவருவதாகத் தெரிகிறது.

இந்தப்பெண் இப்போது தனது பழையபெண் உடைகளை களைந்துவிட்டு, ஆண்களின் வேட்டி, சட்டை முதலியவற்றை அணிந்து கொண்டு வருகின்ருராம்.

# மதுபானம் கொண்டு செல்லக்கூடாது

## சாரதிகளுக்கும் கண்டக்டர்களுக்கும் இ. போ. சபை உத்தரவு

கொழும்பு, வியாழன்
பஸ்வண்டிகளில் போதையூட்டும் மதுபானவகைகளோ மருந்துவகைகளோ காணப்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் சாரதிகளுக்கும் கண்டக்டர்களுக்கும் இ. போ. சபை எச்சரித்துள்ளது.

"பஸ்வண்டிகளில் மதுபான வகைகள் கண்டுபிடிக்கப்படும் பொழுது அதற்குரியவர்களைக் கண்டுகொள்ள முடியாமலிருப்பது வழக்கம். இவ்விதம் மதுபானவகைகளுக்குரியவர்களைக் கண்டுகொள்ள முடியாதுபோனல் சாரதிகள், கண்டக்டர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்" என்று இ. போ. சபை தெரிவித்துள்ளது.

பஸ்களில் மதுபானவகைகள் கண்டுபிடிக்கப்பட்டு அதற்கு உரியவர்களைக் கண்டுகொள்ள முடியாது போனல் இவ்விஷயத்தை பகுதி இ. போ. சபைக் காரியாலயங்களுக்கு அறிவிக்குமாறு ஒவ்வொரு பகுதி பொலிஸ் நிலையங்களையும் கலால் இலாகாக்களையும் கேட்டுக்கொள்ளுமாறு ஒவ்வொரு பகுதி இ. போ, சபை மனேஜர்களுக்கும் இ. போ. சபை உத்தரவிட்டுள்ளது.

## கிரிக்கட் விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி
சுண்டிக்குழி இளந்தாரகைக் கழகத்திற்கும் யுனைடெட் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற கிரிக்கட் பந்தாட்டப்போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

முதலாவது இன்னிங்ஸ்சில் யுனைடெட் கழகம் 106 ஓட்டங்களையும் மற்றக்கோஷ்டி 86 ஓட்டங்களையும் பெற்றது.

இரண்டாவது இன்னிங்ஸ்சில் யுனைடெட் கழகம் 86 ஓட்டங்களைப்பெற்றது. அடுத்து இளந்தாரகைக் கழகம் 60 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டிருக்கையில் 6 விக்கட்டுகளை இளந்துவிட்டது. நேரம் 6 மணியானதால், விளையாட்டுக்காரியதரிசி போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததென அறிவித்தார்.

சென்னை, மே 18
இதர ராஜ்யங்களை விட தமிழ்நாட்டில்தான், தண்ணீர் விநியோகம் மோசமானநிலையில் இருக்கிறதென முதன்மந்திரி காமராஜர் அறிவித்தார்.


### றேடியோ

உங்கள் றேடியோவின் தொந்தரவுகளைச் சுலபமான முறையில் நீக்கிப் புதியது போல் திருத்தித் தருவதற்கு, றேடியோ எஞ்ஜினியேர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### தேவை

அலுமினிய பாத்திர வேலையில் அனுபவம் வாய்ந்த 'ஸ்பின்னேர்ஸ்' 'பொலிஷேர்ஸ்' (Spinners & Polishers) யாழ்ப்பாணத்தில் உள்ள யாழ் அலுமினிய தொழிற்சாலைக்குத் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்கள் 31-5-61 க்கு முதல் அனுப்பவும்.

மனேஜர்,
யாழ் மெட்டல் இன்டஸ்றீஸ்,
250, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தாங்கள் விரும்பும் தகமையுள்ள மணமகன், மணமகள் தேவையா?

விபரங்களுக்கு:
வி. வ. நிலையம்
160, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

### குத்தகைக்கு காணி

வண்ணர்பண்ணை வடகிழக்கு ஆறுகால் மடத்தடியிலுள்ள, யாழ்ப்பாணம்-மானிப்பாய் ரோட்டிலிருந்து பிரிந்துசெல்லும் இரண்டாவது ஒழுங்கையிலிருக்கும் மூன்ருவது காணி, நெற்பரப்பு 31, தென்னை, பனை. இரு கிணறு உள்ள காணி குத்தகைக்கு எடுக்க விரும்புவோர், கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். பட்டணத்திற்கு அருகாமையிலிருப்பதனுல், பாற்பண்ணை, கோழிப்பண்ணை வைப்பதற்கு இது ஓர் உகந்த இடம்.

செ. இரத்தினசபாபதி,
இல. 64, டீல் பிளேஸ்,
கொழும்பு-3.


## ரூபாய் 1 லட்சம் அபினி கடத்தல்

### 18 மாதக் கடுங்காவலுடன் 2,000 ரூபாய் அபராதம்

சென்னை, மே 18
கள்ளத்தனமாக ஒரு லட்சம் ரூபா பெறுமதியான அபினியைக் கடத்தி வைத்திருந்ததாக எழுகிணறு பகுதியைச் சேர்ந்த தாஜ்மல் ஹுசேனுக்கும் கீழ்ப்பாக்கம் சையத் சஹுதீனுக்கும் பிரதம மாகாண மாஜிஸ்திரேட் திரு. பி. எஸ். சோமசுந்தரம் தலா 18 மாதக் கடுங்காவல் தண்டனையும் ரூ. 2,000 அபராதமும் விதித்துள்ளார்.

அபினி கடத்தப்பட்டுவருவதாகச் செய்தி கிடைத்ததும் உதவி இன்ஸ்பெக்டர் ஜி. வரதராஜனும் துப்பறியும் இலாகாவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் அண்ணாமலையும் சோதனைகள் பல செய்து ஒரு லட்சம் பெறுமதியான அபினியை, கார் ஒன்றின் பின் சீட்டுக்கும் முன் சீட்டுக்கும் இடையே உள்ள மூன்று சாக்குப்பைகளில் இருந்து கண்டு பிடித்தார்கள்.

## நைலோன் உள்ளாடைகள்

### பெண்களுக்கு எச்சரிக்கை

ஸ்கார்பரோ, மே 17
நைலோன் உள்ளாடைகள் அணிவதால் பேரபாயம் ஏற்படலாம் என்றும், இந்த ஆடைகளை அணியாமல் இருப்பதே நலம் என்றும் விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர்.

நைலோன் உள் ஆடைகள் அணிந்திருக்கும் பெண்களின் உடல் அசையும்போது, அந்த ஆடைகள் அங்கங்களில் உராய்வதால் மின்சார தீப்பொறிகள் கிளம்பும் என்று நைலோன் உற்பத்தியின்போது தொழிற்சாலைகளில் உள்ள எளிதில் தீப்பிடிக்கும் பெட்றோல் போன்ற வஸ்துக்கள் தீப்பிடித்து, கொழுந்து விட்டு எரியலாம் என்றும் காரணம் காட்டப்பட்டுள்ளது.

## 6 வருட பண மோசடி

### அரசாங்க அதிகாரி கைது

பெங்களூர், மே 17
அரசாங்கத்தில் ரூ. 17,000 வரை மோசடி செய்யப்பட்ட சம்பவத்தை ராஜ்ய துப்பறியும் இலாகா கண்டுபிடித்துள்ளது. இந்த மோசடி ஆறு ஆண்டுகளாக நடந்துவந்திருக்கிறதாம். மத்திய அரசாங்க இலாகா அதிகாரி ஒருவர் இதில் சம்பந்தப்பட்டிருக்கிருர்.

இந்திய அரசாங்க காரியாலயத்தில் கணக்கராக வேலை பார்க்கும் அந்த உத்தியோகத்தர் 1955 லிருந்து சுமார் 200 தடவை யூனியன் அரசினரை மோசடி செய்திருக்கிருராம். அவ்வுத்தியோகத்தரின் பெயர் சுப்பிரமணியம். அவர் கடந்த ஆறு ஆண்டுகளாகப் பத்திரங்களில் பொய்க் கையெழுத்திட்டு மோசடி செய்துவந்தாராம்.

அவர் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப் பட்டுள்ளார்.

## ஆஸ்பத்திரியில் புத்தரகித்த

கொழும்பு, வியாழன்
பண்டாரநாயக்கா கொலை வழக்கில் சென்றவாரம் மரண தண்டனை விதிக்கப்பட்ட புத்தரகித்த இரத்தக்கொதிப்பு காரணமாக வெலிக்கடைச் சிறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.


## யாழ்ப்பாணத்தில் ஓர் புதிய சாதனை!

உங்கள் காப்பியின் தரம், குணம், மணம், எந்நாளும் ஒரேவிதமாக அமைகிறதா?

இதோ நாங்கள் பெரும் பணச்செலவில் தருவித்துள்ள நவீன

# எலக்ரிக் றேஸ்டர்

மூலம்

14 ருத்தலுக்குக் குறையாமலும் அதற்கு மேலும் உங்களுக்குத் தேவையான காப்பியை வறுத்து அரைத்து அரை மணி நேரத்தில் குணம், மணம் நிறைந்த காப்பித்தூளைத் தருகிறோம்.

ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள்!

குறைந்த செலவில் குறித்த நேரத்தில் காப்பித்தூள் தயாரிக்கப்படுகிறது!

**Mohamedally Abdulally**

**முகம்மது அலி அப்துல் அலி**

5 & 7, பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன்: 515

# ஸ்தலஸ்தாபன ஊழியர்களுக்கு எம். பி. வாக்குறுதி

## குறைகளை நிவர்த்திக்க ஆவனசெய்வாராம்

யாழ்ப்பாணம் வெள்ளி

பட்டினசபை, நகரசபை, மாநகரசபை ஆகியவைகளில் ஆறு மாதங்களுக்கு மேல் கடமையாற்றும் ஊழியர்களை நிரந்தரமாக்குவது சம்பந்தமான விஷயத்தை ஸ்தல ஸ்தாபன மந்திரியின் கவனத்துக்குக் கொண்டுவந்து ஆவன செய்வதாக யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா, தம்மைச் சந்தித்த வட இலங்கை தற்காலிக ஸ்தல ஸ்தாபன ஊழியர் சங்கத் தூது கோஷ்டிக்கு வாக்குறுதி யளித்தார்.

வட இலங்கை தற்காலிக ஸ்தல ஸ்தாபன ஊழியர் சங்கத்தின் தூது கோஷ்டியொன்று சங்கச் செயலாளர் திரு. கே. நாயகம் தலைமையில் திரு. துரையப்பாவைச் சந்தித்து மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தது.

ஸ்தல ஸ்தாபன ஊழியர்கள் கிராமச் சங்கங்களில் மாத்திரமன்றி பட்டினசபை, நகரசபை, மாநகரசபை ஆகியவைகளிலும் கடமையாற்றுகிறார்களென்றும். அவர்கள் ஆறு மாதம் தொடங்கி ஐந்து வருடங்கள்வரை தற்காலிக ஊழியர்களாகவே இருக்கிறார்களென்றும் தூது கோஷ்டியினர் தெரிவித்தனர். தகுதியும் தராதரமும், அனுபவமுமுடையவர்கள் ஆறு மாதங்களுக்கு மேல் தொடர்ந்து கடமையாற்றினால் அவர்களை நிரந்தரமாக்குவதற்கு உதவிபுரியுமாறும் தூது கோஷ்டியினர் திரு. துரையப்பாவைக் கேட்டுக் கொண்டனர்.

எம் பி. யிடம் இத் தூது கோஷ்டியினர் சமர்ப்பித்த மகஜரில் பின்வருமாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

எங்கள் சங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள் எல்லாரும் ஆறு மாதங்கள் தொடங்கி ஐந்து வருடங்கள்வரை தொடர்ச்சியாக இன்றும் தற்காலிக ஊழியர்களாகவே கடமையாற்றிக் கொண்டு வருகிறார்கள். ஆனால் அவர்கள் சேவை நிரந்தரமாக்கப்படும் என்று இதுவரையில் உத்தியோக தோரணையில் எதுவித சுற்றறிக்கையும் விடுக்காது ஸ்தல ஸ்தாபன ஊழியர்களில் ஒரு பகுதியினரான கிராமச்சங்க ஊழியர்களுக்கு மட்டும் "1959ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ந் திகதிக்கு முன்னர் கிராமச் சங்கத்தில் சேர்ந்து இன்னும் ஸ்தல ஸ்தாபன சேவைக் கமிஷனின் கீழ் சேர்க்கப்படாத ஜே. எஸ். சி. சித்தியடைந்த ஊழியரை கமிஷனின் கீழ் சேர்த்துக்கொள்வதென ஸ்தல ஸ்தாபன மந்திரி தீர்மானித்துள்ளார்" என பத்திரிகையில் செய்தி வெளியிட்டு உள்ளார்கள். அதனைப் பார்த்ததும்;

1. ஸ்தல ஸ்தாபன ஊழியர்கள் சம்பந்தமாக ஸ்தல ஸ்தாபன சேவைக் கமிஷனலோ நிரந்தரக் காரியதரிசியாலோ அமைச்சராலோ விடுக்கப்படும் பொதுவான சகல சுற்றறிக்கைகளும் கிராமச் சங்கம் பட்டின சங்கம் நகரசபை மாநகரசபை முதலான எல்லாவற்றுக்கும் ஒன்ருகவே இருப்பது வழக்கம். ஆனல் இந்த முக்கிய விடயத்தில் மட்டும் பட்டின, மாநகர சபைகளில் வேலை செய்யும் தற்காலிக ஊழியர்களைப் புறக்கணித்து கிராமச் சங்க ஊழியர்களுக்கு மட்டும் இச் சலுகையளிக்கப்படுகிறதே மற்றவர்களின் வாழ்வு மலர்வதில்லையா?

2. புதிதாக ஸ்தல ஸ்தாபன சேவைக் கமிஷனல் வேலைக்கமர்த்தப்படுபவர்களிலும் பார்க்க தற்காலிக சேவையில் ஆறு மாதங்களுக்கு மேல் ஐந்து வருடங்கள்வரை இன்றும் தொடர்ச்சியாக வேலை செய்து கொண்டு வரும் ஊழியர்கள் வேலை செய்யும் திறமையும், தகுதியும், அனுபவம் உடையவர்களை அவர்களினது தகுதியும் திறமையும் குறித்து (தற்காலிக ஊழியர்களை) நிரந்தரமாக்க வேண்டும் என்று கிராம, பட்டின மாநகரசபைகள் ஏகமனதாகக் கோரியும் அவைகள் கவனிக்கப்படாது நிராகரிக்கப்படுகிறதே!

3. தற்காலிக ஸ்தல ஸ்தாபன ஊழியர்களாக கிராமச் சங்கம் அல்லாத ஏனைய ஸ்தல ஸ்தாபனப் பகுதிகளில் வருடக்கணக்காகக் கடமையாற்றுபவர்களின் நிலைமை என்ன?

என்ற இன்னோரன்ன எமது அபயக் குரலைத் தாங்கள் மக்கள் சபையில் எடுத்து விளக்கி எங்கள் நிலைமைக்கு ஒரு சுமுகமான வழியமைக்க ஆவன செய்யும்படி எங்கள் சங்கத்தின் சார்பில் வேண்டுகின்ருேம்.

## சந்திரனுக்குப் பயணம்

### விஞ்ஞானிகள் கருத்து

வாஷிங்டன், மே 18

சந்திரனுக்கு மனிதன் செல்வதரல் பயன் உண்டா என்பது குறித்து இரு பிரபல விஞ்ஞானிகள் இன்று மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

ராக்கெட்டுகள், ஒலியைவிட வேகமாகச் செல்லும் விமானங்களைத் தயாரிப்பதில் பிரபலமான டாக்டர் தியோடோர் வான் கார்மன், விஞ்ஞானத் துறை மேதையான டாக்டர் ஹான்ஸ் திர்ரிஸ் ஆகிய அந்த இருவரின் காப்பிரைட் பேட்டிகள் யு. எஸ். நியூஸ் அண்ட் ஓர்ல்ட் ரிபோர்ட் என்ற பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது:

சந்திரனுக்குச் செல்வது விஞ்ஞான கண்ணோட்டத்திலாவது பயனுள்ளது என்று டாக்டர் கார்மன் கூறினர். 1968-க்குள் சந்திரனுக்கு மனிதன் செல்வது சாத்தியமாகும் என்று அவர் நம்புகிருர்.

அக்கருத்தை டாக்டர் திர்ரிஸ் ஏற்கவில்லை. அடுத்த 10 ஆண்டுகளுக்குள் சந்திரனில் மனிதனை இறக்கும் சாத்தியக் கூறு தென்படவில்லை என்றும் அடுத்த 30 அல்லது 40 வருடத்தில் அது சாத்தியமாகுமா என்பது பற்றி சந்தேகப்படுவதாகவும் அவர் கூறினர்.

"சந்திரனில் பரபரப்பானது ஏதும் இருக்காது. செலவுக்கு ஏற்ற பலனிருக்காது. ஆகவே அதற்கு ஏன் கோடிக்கணக்கில் செலவிட வேண்டும்?" என்று டாக்டர் திர்ரிஸ் கேட்டார்.

## 5 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்

### அங்கோலாவில் தேசியவாதிகள் தாக்குதல்

லண்டன், மே 18

வடக்கு அங்கோலாவில் தேசியவாதிகள் நேற்று மீண்டும் நடத்திய தாக்குதலில் ஐந்து போர்ச்சுக்கீஸிய இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். ஆறு சிப்பாய்கள் காயமடைந்தனர்.

காங்கோ எல்லையிலுள்ள ஒரு பாலத்தில் போர்ச்சுக்கீஸிய ரோந்துப்படையினர் ஒரு வாகனத்தில் சென்ற போதே தேசியவாதிகள் அவர்களைத் தாக்கியதாக அறிவிக்கப்பட்டது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7, பகல் 12-45, மாலை 6, இரவு 9)

வெள்ளி 19-5-61

காலை 6-45 உதயகீதம் 6-50 சைவநற்சிந்தனை 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை 7-15 காலைக் கதிர் 7-30 திரைகானம் 7-45 சைவ மங்கையர் கழக மாணவிகள்—பக்திப் பாடல்கள் 8-15 இஸ்லாமிய கீதங்கள் பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள் 5-15 ஆர். சுந்தரமூர்த்தி—நாகஸ்வரம் 6-15 கிராமசஞ்சிகை 6-45 வயலின் இரவு 7-00 ஞானஅஞ்சலி 7-30 விமர்சனம் 7-45 ஆகாசவாணி அஞ்சல் 8-45 இஸ்லாமிய கீதங்கள் 9-15 இஸ்லாமிய நிகழ்ச்சி 10-00 நேயர் விருப்பம்.

### திருச்சி

(செய்திகள் காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

காலை 7-00 இசைக் கதிர் 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள் 7-30 சி. ஜெயராமன் —நாகஸ்வரம் பகல் 12-00 தொழிலாளர்களுக்கு 1-00 மாதர் நிகழ்ச்சி 2-10 எஸ். தர்மாம்பாள்—பாட்டு மாலை 4-45 விவித பாரதி (கர்நாடக சங்கீதம்) 5-45 காந்திகதை 6-15 கிராம நிகழ்ச்சிகள் இரவு 7-30 செம்மங்குடி ஸ்ரீநிவாசய்யர் —பாட்டு 9-15 பலகணி 9-30 மெல்லிசை 9-45 இசை மாலை.

# 'ஆங்கிலம்புதியமுறையில் போதிக்கப்பட வேண்டும்'

## தமிழ்நாடு நிதிமந்திரி கருத்து

ஆங்கிலத்தை எவ்விதம் பயிற்றுவிக்க வேண்டுமென்று கோயம்புத்தூரில் ஆங்கில போதனை ஆசிரியர்களுக்கு நடாத்தப்பட்ட பயிற்சி வகுப்பில் தமிழ்நாடு நிதிமந்திரி திரு. சி. சுப்பிரமணியம் வெளியிட்ட கருத்தின் சுருக்கம் வருமாறு:-

ஆங்கிலம் இன்னும் 10 ஆண்டுகளுக்கு அரசாங்கத்தின் முக்கிய கரும மொழியாக இருக்க வேண்டியிருக்கிறது. இங்கிருக்கும் மற்ற மொழிகளுக்கும் அவற்றுக்குரிய அந்தஸ்து அளித்து ஒருபொது மொழியை நாட்டில் வளர்ப்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய தொன்ருகும். அரசாங்கத்தின் இருமொழிக் கொள்கையும் (ஆங்கிலமும் இந்தியும்) தமிழை இங்கு ஆட்சிமொழியாக்க அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கையும் வரவேற்கத்தக்கது. போதனை மொழியாக இருந்தால் மட்டுமே ஒரு மொழியைப் பயில வேண்டும் என்று மக்கள் எண்ணக் கூடாது.

ஆங்கிலத்திலிருந்து தேசிய மொழிக்கு அந்தஸ்து வழங்கும் பொழுது அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு பிரச்சினைக்கும் ஒவ்வொரு முடிவு உண்டு. ஆனல் அறியாமை, பிடிவாதம் இவை இருப்பதால் மக்கள் தீர்வுகாண முடியாதிருக்கின்ருர்கள்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை தமிழ் மொழியை அரசகருமமொழியாக்குவதற்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. அரசாங்கக் காரியாலயங்களைப் பொறுத்தவரை இன்னும் 10 வருடங்களுக்கு ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும். ஏனெனில் ஆங்கிலத்தை ஒதுக்கிவிட முடியாது.

மாணவர்களும் மாணவிகளும் கல்வி பயிலும் போது இந்தி, ஆங்கிலம், தாய்மொழி ஆகிய மூன்று மொழிகளிலும் நன்ருகத் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். இம்மூன்று மொழிகளும் எந்நிலைக்கு அவர்கள் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமென்பது நிபுணர்கள் நிச்சயிக்க வேண்டியதொன்று. கனிஷ்ட பாடசாலை மாணவர்களும் கல்லூரி மாணவர்களும் இம் மூன்று மொழியையும் பயில நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மாணவர்கள் ஆங்கிலத்தில் கருமமாற்றக் கூடியஅளவுக்கு அவர்களுக்கு ஆங்கிலம் போதிக்கப்பட வேண்டும். பிரதேச மொழிகள் ஆங்கில மொழியின் தரத்துக்கு வளர்ச்சி அடையாதிருப்பதினல் கல்வியைப் பொறுத்தவரையில் ஆங்கிலம் அது வகித்துவந்த இடத்தில் தொடர்ந்து இருக்க வேண்டும்.

### கல்வி போதனை

சுமார் ஒரு நூற்ருண்டு காலமாக ஆங்கிலத்தைக் கற்றிருப்பினும் கல்வி கற்பிக்கும் முறை பழையதாகவே இருக்கிறது. ஆங்கிலக் கல்வி பயிற்றுவிப்பதில் புது முறைகள் பற்றி ஆராய்ந்து இதில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இம் மொழியைப் பயிற்றுவிக்க முன்வர வேண்டும். தற்பொழுது 5-ம் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்பிக்கப்படுகின்றது. பிள்ளைகள் ஆங்கில அறிவு பெற 4-ம் வகுப்பிலிருந்தே ஆங்கிலத்தைப் போதிக்கலாமா என்பது பற்றி ஆலோசனை நடைபெற்று வருகிறது. அம் மொழியின் அமைப்புகளையும் ஒலிகளையும் நன்ருக அறிந்து கொள்ள இது அவர்களுக்கு உதவும் என நான் நம்புகிறேன்.

## வடகொரியா—பாரத வர்த்தக உறவு

புதுடில்லி, மே 18

பாரதத்துக்கும் வடகொரியாவுக்குமிடையிலுள்ள வர்த்தகத்தை மேலும் பலப்படுத்து முகமாக வடகொரியவர்த்தகத் தூதுகோஷ்டியொன்று இன்று புதுடில்லி வந்து சேர்ந்தது.

இரு நாடுகளுக்குமிடையில் இப்பொழுதுள்ள வர்த்தக உடன்படிக்கையின்படி இந்தியா இறக்குமதி செய்யும் பொருள்கள்தான் அதிகம்.

## 2 குடியிருப்பாளர் மீது நடவடிக்கை

கொழும்பு, வியாழன்.

பம்பலப்பிட்டி வீடமைப்புத் திட்டத்தின் வீடுகளில் குடியிருப்பவர்களில் இருவர் தங்கள் வீடுகளில் வெளியார்களுக்கு இடம் கொடுத்திருப்பதாகவும் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தேசிய வீடமைப்புக் கமிஷனர் திரு. கே. எம். பி. ஜெயனெட்டி தெரிவித்தார்.

இவ்வீடுகளில் ஒன்றில் ஒரு எம். பியின் சகோதரர் வசித்து வருவதாகவும் திரு. ஜெயனெட்டி கூறினர்.

வீடமைப்புத் திட்டத்தில் வீடுகள் வழங்கப்படுவதில் 'ஒழுங்கீனம்' நிலவுவதாக திரு: டபிள்யு. தகநாயகா குற்றம் சாட்டி எழுதிய கடிதம் பற்றிக் குறிப்பிடுகையிலேயே திரு. ஜெயனெட்டி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வீடமைப்புத் திட்டத்தில் குடியிருப்பவர்கள் தங்கள் வீடுகளில் வெளியார்களுக்கு கூலிக்கு இடம் கொடுத்திருந்ததால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்துள்ளது. அவர்களை வெளியேற்றுவதற்கு சுமார் ஆறுமாதங்கள் கூடச் சென்றிருக்கிறது என்று திரு. ஜெயனெட்டி கூறினர்.

## கடாங்காவில் இந்திய துருப்புகள்

லியப்போல்ட்வில்லி, மே 18

காங்கோவின் வடக்கு கடாங்கா மாகாணத்தின் இரண்டுபகுதிகளுக்கு இந்தியத் துருப்புக்கள் நேற்று அனுப்பப் பட்டன. இந்தியத்துருப்புகள் அங்கு அனுப்பப்படுவதால் மலைப்பிரதேசமான அப்பகுதியில் கைகலப்பு ஏற்படக் கூடுமென அஞ்சப்படுகிறது. என்ருலும் அங்கு இன்றுள்ள நிலையில் குழப்பம் எதுவும் ஏற்படாதென கடாங்கா அதிகாரிகள் தெரிவித்தனர்.


**ஆயுள்வேத அரிய மருந்துகள்**

புற்று நோயை (Cancer) வேரறுக்குமென செயல் மூலம் நிருபிக்கப்பட்ட மருந்து

"யோகீஸ்வர ரசம்"

தாய்க்குலத்தாருடைய பெரும்பாடு — வெள்ளை இறைத்தல் முதலியன எட்டு நேரத்துடன் குணமடையச் செய்யும் மருந்து

"பெரும்பாடு நிவாரணி"

தாமதமின்றி கலந்தாலோசியுங்கள்.

பொ. செல்லையா
"புற்றுநோய் நிபுணர்"
ஆயுள்வேத வைத்தியர்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.



"லூக்கஸ்"
LUCAS
பற்றறிகள்




சுலபமான தவணை முறையில் இரண்டு வருட உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

முருகன் எலக்ட்ரிக்கல் ஸ்ரோர்ஸ்
6/8, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# வித்தியாதிபதியின் பாடசாலைகளை அரசாங்கம் கையேற்கும்

கொழும்பு, வியாழன்

வித்தியாதிபதியின் கீழுள்ள சகல பாடசாலைகளும் நிதிவருட முடிவுக்குள் உதவிப் பாடசாலை, பயிற்சிக் கலாசாலை சட்டத்தின் 4-ம் விதிப்படி அரசாங்கப் பாடசாலைகளாக மாற்றப்படும்.

இவ்விதம் அரசாங்க பாடசாலைகளாக மாற்றப்பட்டால் அவற்றின் ஆசிரியர்கள் அரசாங்க ஆசிரியர்கள் அனுபவிக்கும் வசதிகளைப் பெறுவர்.

இப்பாடசாலைகளுக்குச் சொந்தமான உடைமைகளை அரசாங்கத்திடம் ஒப்படைப்பதற்கான 1000 ஒப்படைப்பு கட்டளைப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## எலி வேட்டையில் பூனை அகப்பட்டகதை

கொழும்பு, வியாழன்

கடந்த வருடம் எலி வேட்டையில் இறங்கிய புதைபொருள் ஆராய்ச்சியாளர் பல தந்திரோபாயங்களைக் கையாண்டு இறுதியில் ஒரு பூனையைப் பிடித்த செய்தியை சம்பந்தப்பட்ட இலாகாக்கமிஷனர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் நடத்திய வேட்டைக் காலத்துள் எலிகள் 300 புத்தகங்களுக்குக் குறையாமல் அரித்துத் தின்றனவாம்.

## வீதிகள் திருத்தியமைக்கப்பட்டன

காரைதீவு, மே 18

கல்முனை-சாய்ந்தமருது பிரதான வீதியை கடந்த வருடத்தில் திருத்தி அமைத்து வந்த பகிரங்க வேலைப் பகுதி தற்பொழுது சாய்ந்தமருது-காரைதீவு பிரதான வீதியை திருத்தி அமைக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளது. மேற்படிவீதி கடந்த காலங்களில் மிகவும் மோசமான நிலையில் கிடந்தது.


வெகுவிரைவில்!
சினிமாஸ் திரைகளில்
பாலாஜி, பண்டரிபாய், சூரியகலா, மைனாவதி,
ராஜகோபால், கருணாநிதி நடித்த
எங்கள் குலதேவி

6—வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு)
மாலை 6 — இரவு 9-30 மணி



எஸ். எஸ். ராஜேந்திரன்
பி. சரோஜாதேவி, தங்கவேலு
மற்றும் பலர் நடித்த
மணப்பந்தல்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
காலை 10 மணிக்கும் 2 மணிக்கும் இருகாட்சிகள்
எஸ். எஸ். ராஜேந்திரன் - பண்டரிபாய்
நடித்த
அன்பு எங்கே

மனோஹரா (யாழ்ப்பாணம்)
2-15 மணிக்கு ஒரே காட்சி.
சனி, ஞாயிறு காலை 10 மணிக்கும் 2-15 மணிக்கும் இரு காட்சிகள்
ஜெமினி கணேசன், பத்மினி,
வைஜயந்திமாலா நடித்த
வஞ்சிக்கோட்டை வாலிபன்


## இறந்தவர் உயிருடனிருந்த மர்மம்!

யக்கலை, மே 18

ருகம மார்புநோய் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர், மரணமானரென்றும், அவரது பிரேதத்தை உடன் எடுத்துச் செல்லும்படியும், இறந்தவரின் உறவினர்களுக்கு தந்திமூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

தந்தியைக்கண்டு ருகம ஆஸ்பத்திரிக்கு விரைந்து வந்த இனத்தவர்கள், அந்த இறந்த நோயாளி உயிருடன் இருப்பதைக் கண்டு வியந்து நின்றார்கள்.

இதுபற்றி விசாரித்தபோது, குறுவன்என்றவர் உண்மையில் இறந்தவரென்றும் ஆனல், அப்பெயர் உயிருடன் இருந்த ராகவன் எனத் தவறுதலாக குறிப்பிடப்பட்டு விட்டதென்றும் ஆஸ்பத்திரி அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

## வரட்சிக்குப்பின் பெருமழை

முள்ளியவளை, வெள்ளி

நெடுங்கால வரட்சிக்குப்பின் இப்பகுதியில் இடிமுழக்கத்துடன் நேற்றுப் பெருமழை பெய்தது. சிறுபோக வேளாண்மைக்காக வயல்களை உழுவதில் கமக்காரர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

## வாசிகசாலை திறப்பு விழா

வேலணை, வெள்ளி

வேலணை மேற்கு நாவலர் சன சமூக நிலைய வாசிகசாலை வேலணைக் கிராமச்சங்கத் தலைவர் ப. கந்தசாமி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. திருமதி கமலாசனி பொன்னப்பா இதற்கு தலைமை வகித்தார்.

## 500 ஆயுள்வேத வைத்தியசாலைகள் திறக்கப்படும்

கொழும்பு, மே 18

"இன்னும் ஐந்து வருட காலத்திற்குள், நாட்டின் பல பகுதிகளிலும் சுமார் 500 ஆயுள்வேத வைத்தியசாலைகளை நிறுவுவதென்று அரசாங்கம் உத்தேசித்துள்ளது".

இவ்வாறு ஹிங்கொலயிலுள்ள ஒரு மருத்துவ வைத்திய சாலையைத் திறந்துவைத்துப் பேசும்பொழுது சுகாதார மந்திரி திரு. ஏ. பி ஜயசூரியா கூறினர்.

## வான் சாரதி மரணம்

உடுப்பிட்டி, வியாழன்

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த எம். நாகலிங்கம் என்னும் வான் சாரதி செவ்வாய் அதிகாலை செல்வச் சந்நிதியில் பிணமாக காணப்பட்டார்.

நச்சுத் திராவகம் அருந்தியதால் மரணம் ஏற்பட்டதென பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## மாங்குளத்தில் காணிக் கச்சேரி

முள்ளியவளை, வெள்ளி

மாங்குளம், பணிக்கன்குளம், முறிகண்டிப் பகுதியிலுள்ள மக்களுக்கு மானவாரி நெற்காணி கொடுப்பதற்கான காணிக்கச்சேரி இம்மாதம் 19-ந் திகதி மாங்குளம் வாடி வீட்டில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மாங்குளம் கிராம விதானையின் பகுதியிலுள்ளவர்களுக்கே காணி கொடுபடும்எனத் தெரிகிறது.

## 'தாமதமாவதற்கு நாங்கள் பொறுப்பல்ல'

### அரசாங்க ஊழியர் விளக்கம்

கொழும்பு, வியாழன்

அரசாங்க போக்கு வரத்து சேவை காரணமாக அரசாங்க ஊழியர் தாமதித்து அலுவலகங்களுக்கு செல்லவேண்டி நேர்ந்தால் அதற்கு அவர்களைப் பொறுப்பாளிகளாக்கக் கூடாதென அரசாங்க சேவைகுவாசி குமாஸ்தாக்கள் சங்கம் திறைசேரி அறிவித்துள்ள சுற்றறிக்கைக்கு ஆட்சேபம் தெரிவிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

திறைசேரியின் 22-4-61இன் இல. 532 ஷரத்திலுள்ள ரயில், பஸ் வேறு எந்தவித போக்குவரத்தால் ஏற்படும் தாமதமும் அலுவலகத்துக்கு நேரத்துக்கு வருவதற்கு சாக்காகக் கூற முடியாது என்பதை இச்சங்கத்தின் பொதுக் காரியதரிசி திரு. கரிஸ் விக்ரமதுங்கா சுட்டிக் காட்டியுள்ளார்.

## கோர்ட்டில் தகப்பனும் மகனும்

கொழும்பு, வியாழன்

தனது மகளுக்கு வாங்கிக் கொடுத்த ஒரு சோடி தங்கத் தோடுகளைத் தனது மகனே திருடிய குற்றத்துக்காக, தகப்பனும் மகனும் கோர்ட்டுக்கு வந்திருந்த சம்பவம் ஒன்று அண்மையில் கொழும்பில் நடைபெற்றுள்ளது.

கிருண்ட்பாஸில்வசிக்கும் எம். பொன்னுத்தையர் என்பவர் தனது மகளான சிவலட்சுமிக்கு பத்து ரூபாய் பெறுமதியான ஒரு சோடித் தோடுகளை வாங்கிக் கொடுத்திருந்தார். ஒருநாள் இதைக்காணுமல் தேடிக்கொண்டிருந்த சமயம் பொன்னுத்தையரின் மகன் இராமன் அந்தத்தோடுகளைத் தந்தையிடம் திருப்பிக்கொடுத்தான்.

அந்தத் தோடுகளை மகன் இராமன்தான் களவாடியிருக்க வேண்டும் என்று கருதிய பொன்னுத்தையர் தனதுமகனை கிருண்ட்பாஸ் பொலிஸ்நிலையத்தில் ஒப்படைத்தார்.

நீதிபதியினல் இவ்வழக்கு தள்ளுபடிசெய்யப்பட்டது.

## கண்டியில் குளிர்சாதன அறை

கண்டி, வியாழன்

குளிர்சாதன அறையொன்றைக் கண்டியில் நிறுவ விற்பனவு வசதி இலாகா முடிவு செய்துள்ளது. சோவியத் உதவியுடன் இது சீக்கிரம் நிறுவப்படும்.

## இ. போ. ச. வேலைபற்றி விசாரணைச்சபை

கொழும்பு, வியாழன்

இலங்கை போக்குவரத்துச் சபை வேலைசெய்யும் முறை பற்றி ஒரு விசாரணைச்சபையை நியமிக்க உத்தேசித்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது. கட்டண சபையின் இறுதி அறிக்கை இன்னும் பூரணமாக்கப்படவில்லை எனவும் அறிவிக்கப்பட்டது.

## மக்களின் சுறுசுறுப்பு

காரைதீவு, மே 18

காரைதீவுக்குத் தெற்கேயுள்ள மாட்டுப்பளை, செங்கற்படை, அல்லிமுல்லை ஆகிய வயல் பிரதேசங்களில் அறுவடைக்காலம் தொடங்கிவிட்டதால் மக்கள் சுறுசுறுப்பாகவும், மும்முரமாகவும் அறுவடை வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

இம்முறை இந்த வயற் பிரதேசங்களில் நல்ல விளைச்சல் கண்டிருக்கிறது என கூறப்படுகிறது.

## இந்தியச் செய்திகள்

சென்னையிலுள்ள சகல உயர் ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கும் நூல் நிலைய புத்தகங்கள் வழங்க முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.

∴ ∴ ∴

தமிழ்நாட்டில் இப்போது 450 சிறு நூல்நிலையங்களும் 600 விநியோக நிலையங்களும் இருக்கின்றன.

∴ ∴ ∴

வேலை செய்பவர்கள் கல்வி கற்குமுகமாக, மாலைநேரப்பள்ளிக்கூடங்களையும், கல்லூரிகளையும் ஆரம்பிக்க இந்திய சர்க்கார் யோசனை செய்துவருகிறது.

∴ ∴ ∴

சிறுத்தை ஒன்றைகொன்று 3 பேரைக் காப்பாற்றிய திருப்பத்தூர் கண்ணனுக்கு 100 ரூபாய் பரிசுப்பத்திரமும், 40 ரூபாய்பெறுமதியானவெள்ளிப் பதக்கமும் வழங்கப்பட்டது.

∴ ∴ ∴

வேலூரிலுள்ள அம்பேத்கார் நகரில் புத்தர் ஆலயம் ஒன்று நிறுவப்படவிருக்கிறது.

∴ ∴ ∴

இந்தியாவில் 3 வாரம் சுற்றுப்பிரயாணம் செய்யும் ரஷ்ய தாவரசாஸ்திரநிபுணர்கோஷ்டி கோயம்புத்தூர் வந்து சேர்ந்தது.

## கார் இறக்குமதி தடை கொள்கை மாற்றமில்லை

கொழும்பு, வியாழன்

கார் இறக்குமதித் தடையில் அரசாங்கம் கடைப்பிடித்து வந்த கொள்கையில் எதுவித மாற்றமும் இல்லை என ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாட்டு இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஒரு வருடத்துக்கு இத்தனை கார்கள் இறக்குமதி செய்யலாமென ஒருவருக்கும் அனுமதிப் பத்திரம் வழங்கப்படவில்லை. எனினும் 1958, 1959, 1960ம் ஆண்டுகளில், இறக்குமதியான தொகையில் 50 வீத 'செவி'களை இறக்குமதி செய்ய இந்த இலாகா அனுமதியளித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## பத்திரிகைகளை அரசாங்கம் எடுக்கும்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

மாக அது இருக்கிறது. அந்த ஆபாசப்பத்திரிகையை அனுமதிப்பதைவிட ஒரு கமிஷனை நியமிப்பது மேல்."

### பீலிக்ஸ் பதில்

திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பேசுகையில் பின்வருமாறு கூறினர்:-

"அவசரகாலச் சட்டத்திலோ அல்லது ரத்தம் சிந்துவதிலோ எனக்கு நம்பிக்கை கிடையாது. அவசிய சந்தர்ப்பம் இல்லாமல் அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஆட்சி செய்வதும் நல்லதல்ல.

நான் யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள நிலைபற்றி சபைக்கு அறிவித்தேன். சகல சம்பவங்களும் சபைக்குத் தெரிவிக்கப்பட்டன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைதி நிலவுவதாக அறிக்கையைத் தொடர்ந்து வெளியிட்டுக் களைத்துவிட்டதனல்தான் அதை இப்போது நிறுத்திவிட்டேன்.

ஊரடங்குச் சட்ட நேரத்தைக் குறைப்பதுபற்றி ஆலோசிக்கப்பட்டுவருகிறது.

### பத்திரிகைகள் எடுக்கப்படும்

சிம்மாசனப் பிரசங்கத்தில் தெரிவிக்கப்பட்டபடி. பத்திரிகைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு மே மாதம் 19-ந் திகதி அச்சிட்டு வெளியிட்டப்பெற்றது.